**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 74 of 2024

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.மாதம்மாள்

Date : 25.06.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

*11)* *2* ஏக்கர் நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளேன். சாட்சி தற்போது *3 1/2* நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளதாக சொல்கிறார். சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களின் பட்டா என் அப்பா பெயரில் தான் உள்ளது. தாவா சொத்துக்களின் கூட்டு பட்டாவில் வாதிகளின் பெயர்கள் இல்லை. என் முன்னோர்கள் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்யவில்லை. *2*ம் பிரதிவாதி சொத்துக்களை வழக்கு போட்ட பிறகு தான் விற்றார். மூன்று வருடத்திற்கு முன்பாக *2*ம் பிரதிவாதி சொத்துக்களை விற்ற விவரம் எனக்கு தெரியும். சரவணன் *3* ஏக்கா் நிலத்தை எங்கள் கையெழுத்து இல்லாமல் விற்று விட்டார். சரவணன் விற்ற சொத்துக்களை வாங்கிய நபர்கள் அனுபவித்து வருகிறார்கள். விற்காத சொத்துக்களை சரவணன் அனுபவித்து வருகிறார். கமலாபுரத்தை சேர்ந்த நபர்களுக்கு சரவணன் சொத்தை விற்றுள்ளார். பெயர் எனக்கு தெரியவில்லை.

12) என் அப்பா அவர் உயிருடன் இருக்கும் போதே சொத்துக்களை 26.9.2008 அன்று தாவா சொத்துக்கள் குறித்து சரவணன் பெயருக்கு உயில் எழுதி வைத்துவிட்டார் என்றால், எங்களுக்கு தெரியாமல் என் அப்பாவை ஏமாற்றி கைரேகை வாங்கி கொண்டுள்ளார். என் அப்பா எப்போதுமே இங்கிலீசில் தான் கையெழுத்து போடுவார். பிரதிவாதி அனுப்பிய 24.2.2012 தேதியிட்ட பதில் சட்ட அறிவிப்பிலே தாவா சொத்துக்கள் உயில் மூலமாக சரவணனுக்கு பாத்தியம் என்று எழுதி வைத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண் 121/2012 வழக்கின் பதிலுரை 02.11.2012 தேதி மூலமாக உயில் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் சல் வழக்கு எண் 121/2012 வழக்கில் சமாதானமாக போவதாக சொல்லி சமரச மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. சொத்தை கொடுப்பதாக சொன்னதால் நாங்கள் வழக்கை நடத்தவில்லை. அந்த வழக்கில் நீதிமன்றத்தில் நேரில் சென்றோ அல்லது மனு மூலமாகவோ பிரதிவாதிகள் சொத்தை கொடுப்பதாக சொன்னதால் வழக்கை நடத்த விரும்பவில்லை என்று தெரிவிக்கவில்லை.

13) 2023 வரை எங்களுக்கு தாவா சொத்தில் வந்த விளைச்சலிலோ அல்லது பணத்திலோ பாகம் எதுவும் கொடுக்கவில்லை. நாங்கள் வாதிகள் எல்லோரும் திருமணமாகி நல்ல சந்தோசமாக இருக்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் மதிப்பு அதிகமாகி விட்டதால், சட்டத்திற்கு புறம்பாக சொத்தை அடைய வேண்டும் என்பதற்காக இந்த

வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வேண்டாத நபர்களின் பேச்சை கேட்டு கொண்டு 2ம் பிரதிவாதி என் அப்பாவின் 2வது மனைவியின் மகன் என்பதால் அவர் மீதுள்ள விரோதம் காரணமாக கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு என் அப்பா எனக்கு எழுதி கொடுத்த சட்டப்படியான உயில் மூலமாக தாவா சொத்துக்களை அடைந்து அனுபவித்து அதை 6ம் பிரதிவாதிக்கு சட்டபடி விற்றுள்ளார் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி பெயரில் உள்ள சட்டபடியான கிரைய ஆவணத்தை ரத்து செய்ய முடியாது என்றால் சரியல்ல.

*14)* ஏற்கனவே தாவா சொத்துக்கள் சம்பந்தமாக பாகபிரிவினை வழக்கு போட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாததால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.